*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*17 10 2025 FRIDAY 7.15 PM*
*வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

1. பழங்குடியின கிராமங்களை தற்சார்பு பெற்றவையாக உயர்த்துவதற்காக, ஆதி கர்மயோகி திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
2. இந்தியா - எகிப்து இடையே வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகள் மேம்பட்டு வருவது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.
3. உலகின் நம்பிக்கைக்குரிய வர்த்தக நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.
4. குஜராத் மாநிலத்தில் திரு. புபேந்திர பட்டேல் தலைமையிலான அமைச்சரவை இன்று முழுமையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
5. உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

பழங்குடியின கிராமங்களை தற்சார்பு மற்றும் தன்னிறைவு பெற்றவையாக உயர்த்துவதை இலக்காக கொண்டு, ஆதி கர்மயோகி திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஆதி கர்மயோகி திட்டம் தொடர்பான தேசிய கருத்தரங்கில் உரையாற்றிய அவர், நாட்டின் வளர்ச்சிப் பணிகளில் பழங்குடியின மக்களை ஈடுபடுத்துவதற்கும், அவர்கள் வசிக்கும் பகுதிகளில் வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

இந்தியா – எகிப்து இடையே வர்த்தகம், தொழில்நுட்பம், எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகள் மேம்பட்டு வருவது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

எகிப்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் Badr Abdelatty-யுடன் புதுதில்லியில் இன்று பேச்சுவார்த்தை நடத்திய அவர், காஸா அமைதி ஒப்பந்தத்தில் எகிப்தின் பங்களிப்புக்கு அந்நாட்டு அதிபர் திரு. Abdel Fattah El Sisi-க்கு பாராட்டு தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் மூலம், காஸா பகுதியில் அமைதி நிலைநாட்டப்படும் என்று திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஏழை எளிய மக்களின் மேம்பாட்டுக்கான திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம், Saran-ல் இன்று அம்மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான பிஜேபியின் பிரச்சாரத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படுத்திய திட்டங்களை பட்டியலிட்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம், தீவிரவாதிகளின் செயல்பாடுகள் ஒடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பீகார் மாநிலத்தில் திரு. நிதிஷ்குமார் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, கடந்த 20 ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும்,

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள பீகார் மாநிலத்தில் வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் மற்றும் மதுபாட்டில்கள் வழங்குவதை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு அமைப்புகளை, தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இன்று, தலைமை தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் மற்றும் தேர்தல் ஆணையர்கள் திரு. சுக்பீர் சிங் சாந்து, திரு. விவேக் ஜோஷி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், காவல்துறையினர், துணை ராணுவப்படையினர் உள்ளிட்டோர் பணப்புழக்கத்தையும், பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதையும் தடுப்பதற்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

வாகன சோதனை மற்றும் பறக்கும் படையினரின் பணிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பொருளாதார குற்றங்கள் தடுப்பு பிரிவினரின் ஒத்துழைப்பும் அவசியம் என்று தேர்தல் ஆணையர்கள் தெரிவித்தனர்.

இந்த தேர்தல் எவ்வித சமரசமும் இன்றி, நேர்மையாகவும், அமைதியாகவும் நடப்பதை பாதுகாப்பு அமைப்புகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணைய கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

>>>>>><<<<<<

பிரதமரின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலை, ரயில்வே, மெட்ரோ ரயில் உள்ளிட்ட ஐந்து முக்கிய திட்டப் பணிகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மத்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை செயலர் திரு. பங்கஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக்கூட்டத்தில் சரக்கு போக்குவரத்துக்கான நவீன பன்னடுக்கு கட்டமைப்பு திட்டங்களை கொண்டு வருவதற்கு முன்னுரிமை அளிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இரண்டு ரயில்வே திட்டங்கள், இரண்டு நெடுஞ்சாலை திட்டங்கள் மற்றும் ஒரு மெட்ரோ ரயில் திட்டம் ஆகிய ஐந்து திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

கர்நாடகாவில் உள்ள ஹோஸ்பெட் – பெல்லாரி ரயில்பாதை, மத்தியப்பிரதேசத்தின் *Gondia – Jabalpur* இடையேயான இரட்டை ரயில்பாதை திட்டம், மஹாராஷ்ட்ராவின் சரக்கு போக்குவரத்திற்கான திட்டங்கள் ஆகியவை குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ராஜஸ்தான் மாநிலத்தில் மஹாவா – மாண்டவர் நெடுஞ்சாலையை அகலப்படுத்துவது, பீகார் மாநிலத்தில் *Anisabad – Deedargunj* ஆறுவழி மேலடுக்குப் பாதை திட்டம் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ஜெய்ப்பூரில் 42 புள்ளி எட்டு கிலோமீட்டர் தூரத்திற்கு இரண்டாவது கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டு வருவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

>>>>>><<<<<<

உலகின் நம்பிக்கைக்குரிய வர்த்தக நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வர்த்தக அமைப்புகள் கூட்டமைப்பின் 105வது ஆண்டு கூட்டத்தில் உரையாற்றிய அவர், உலக அரங்கில் இந்திய பொருளாதாரம் வலுப்பெற்றிருப்பதால், வர்த்தகம் தொடர்பான உறவுகள் குறிப்பிடத்தக்க அளவில் மேம்பட்டிருப்பதாக கூறினார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஆஸ்திரேலியா, மொரீசியஸ் மற்றும் ஐரோப்பிய வர்த்தக கூட்டமைப்புடன் மேற்கொள்ளப்பட்ட தாராள வர்த்தக ஒப்பந்தங்கள் இந்தியாவின் வர்த்தக உறவுகளில் புதிய அத்தியாயத்தை தொடங்கியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு புதிய வாய்ப்புகள் இந்த ஒப்பந்தங்கள் மூலம் கிடைத்திருப்பதாகவும், இதனால் ஏற்றுமதியாளர்களுக்கு அதிக வருவாய் ஈட்டும் வாய்ப்புகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

முதலீடுகள் அதிகரிப்பதற்கும், இந்தியாவில் மேம்பட்ட தொழில்நுட்பங்களை கொண்டு வருவதற்கும் இந்த தாராள வர்த்தக ஒப்பந்தங்கள் வழிவகுத்துள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாட்டின் மின்உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக மாற்று எரிசக்தி மூலம் பெறப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் கேப்டவுனில் சுற்றுச் சூழல் தொடர்பான ஜி.20 நாடுகளின் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், சூரியமின்சக்தி மூலம் 127 ஜிகாவாட் மின்உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் உலக அளவில் சவாலாக உள்ளது என்று அவர் கூறினார்.

உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே சுற்றுச் சூழல் சவால்களுக்கு தீர்வு காண முடியும் என்று தெரிவித்தார்.

உலக மக்கள் தொகையில் 80 சதவீதம் பேர் ஜி.20 நாடுகளில் வசிப்பதாக அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளால் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெற்று வருகின்றனர்.

வேளாண் இடுபொருட்கள், உணவுப் பொருட்கள் மற்றும் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலைகளும் கணிசமாக குறைந்துள்ளதாக திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – பயனாளி 45 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

குஜராத் முதலமைச்சர் திரு. புபேந்திர பட்டேல் தலைமையிலான அமைச்சரவை முழுமையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

காந்திநகரில் இன்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில், ஆளுநர் திரு. ஆச்சாரிய தேவ்ரத், 21 அமைச்சர்களுக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு உறுதிமொழியும் செய்து வைத்தார்.

திரு. Harsh Sanghvi துணை முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்டார்.

இந்த பதவியேற்பு விழாவில், பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குஜராத் அமைச்சரவையில் 3 பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு. புபேந்திர பட்டேலை தவிர, அனைத்து அமைச்சர்களும் நேற்று ராஜினாமா செய்ததை அடுத்து, அம்மாநிலத்தில் இன்று புதிய அமைச்சரவை பொறுப்பேற்றுள்ளது.

*>>>>>><<<<<<*

***உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

***குவஹாத்தியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 13-15, 15-9, 15-10 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Saki Matsumoto-வை வென்றார்.***

*>>>>>><<<<<<*

***ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.***

*>>>>>><<<<<<*

***உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் Zoravar Singh Sandhu இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.***

*>>>>>>END<<<<<<*